ம.அ.1.ந.க.எண்.பி2/02647/2008
ஆணையர் அவர்களின் 10.07.2008 நாளிட்ட குறிப்பு

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :407/2008 பொருள் எண்.1

**பழுதடைந்த மீன் அங்காடி, மற்றும் சத்துணவு கூடம் கட்டிடங்கள் இடிக்க அனுமதி.**

| வ.எண். | வார்டு எண்.12 | மண்டலம்–1 |
|---|---|---|
| 01 | இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | பார்த்தசாரதி நகரில் பழுதடைந்த நிலையில் உள்ள மீன் அங்காடி மற்றும் சத்துணவுக் கூடம் (எண்.58 மற்றும் 59) |
| 02 | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | மீன் அங்காடி – 1967ஆம் ஆண்டு சத்துணவுக் கூடம் – 1979 ஆம் ஆண்டு கட்டிடத்துறையால் கட்டடப்பட்டது. |
| 03 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | கட்டிடங்களின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.58,437/– |
| 04 | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| 05 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 2652.50 சதுர அடி |
| 06 | திட்ட முன்மொழிவு | இக்கட்டிடங்களை இடித்துவிட்டு புதியதாக நவீன முறையில் பல்நோக்கு கட்டிடம் கட்டப்படவுள்ளது. |
| 07 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள். | 11/2008 நாள்:17.04.2008 |

எனவே மேற்கண்ட மீன் அங்காடி மற்றும் சத்துணவுக் கூட கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

06.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.66/08 நாள்.06.8.08–ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.223/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.3.ந.க.எண்.பி1/ 1605 /2008
ஆணையரின் 20.03.2008 நாளிட்ட குறிப்பு

27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :408/2008 பொருள் எண்.2

## கட்டிடம் இடிக்கப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதி

**வார்டு எண். 47** **மண்டலம்–3**

| | | |
|---|---|---|
| இடிக்கப்பட்ட கட்டிடத்தின் விவரம் | : | மண்டலம்–3, பகுதி–9, வார்டு–47 அல்லிக்குளம் வணிக வளாகப்பகுதியில் உபயோகமற்ற நிலையில் உள்ள மோட்டார் அறை |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | : | 1999–2000ஆம் வருடம் |
| கட்டிடத்தின் பரப்பளவு | : | 64 ச.அடி |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | : | ரூ. 28009/– |
| கட்டிடம் இடிக்கப்பட்டதற்கான காரணம் | : | ஹாக்கிங் கமிட்டி மூலம் கடை ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் நடுவில் இருப்பதால் வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கு இடையூறாக இருந்தது. |
| திட்ட முன் மொழிதல் | : | பொதுமக்கள் உபயோகத்திற்கு நடைபாதையாக மாற்றம் செய்யப்பட்டது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள் | : | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.153, நாள் : 26.02.2008. |

எனவே, மேற்கண்ட உபயோகமற்ற நிலையில் உள்ள மோட்டார் அறை கட்டிடம் அவசர அவசியம் கருதி இடித்து அகற்றியமைக்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.238/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.5.ந.க.எண்.பி1/3925/2008
ஆணையர் அவர்களின் 04.07.2008 நாளிட்ட குறிப்பு.

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :409/2008 பொருள் எண்.3

**பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடிக்க அனுமதி**

வார்டு எண்.68 மண்டலம் எண்.5

| | |
|---|---|
| இடிக்க வேண்டிய கட்டிடத்தின் விவரம் | கீழ்பாக்கம் பூங்கா சாலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை, வருடம் மற்றும் பரப்பளவு | கட்டிடத்துறை, 1974, 120 சதுர அடி |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.10,500/– |
| இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| திட்ட முன்மொழிதல் | பழுதடைந்த பொதுக் கழிப்பிடத்தை இடித்து விட்டு கீழ்பாக்கம் பூங்கா சாலையை விரிவாக்கம் செய்தல் |
| வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள். | 5வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.17, நாள்:28.05.2008. |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த பொதுக் கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்)மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“7.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 47 /2008, நாள் 7.08.2008-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.229/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.இ1/3920/2008**
**ஆணையாளர் அவர்களின் 12.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :410/2008 பொருள் எண்.4

**பழுதடைந்த கோட்ட அலுவலகத்தை இடிக்க அனுமதி.**

வார்டு–86 மண்டலம்–6

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–6, பகுதி–17, வார்டு–86 அருணாச்சலம் தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள 86வது கோட்ட அலுவலகம் செயல்படும் கட்டிடம் |
| கட்டிடம் கட்டடப்பட்ட துறை மற்றும் வருடம் | பணித்துறை, 1965 |
| பரப்பளவு | 1490 சதுர அடிகள் |
| தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.58,062/– |
| கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | இக்கட்டிடம் பழமை காரணமாக சிதிலமடைந்து விட்டது. மழைக்காலங்களில் மழைநீர் கசிவு ஏற்படுகிறது. பக்கச் சுவர் மற்றும் ஆர்.சி.சி. தள மேற்கூரையில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது. மாடிப்படிகள் உடைந்தும், காரைகள் பெயர்ந்தும் பழுதுபார்க்க இயலாத நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| திட்டமுன் மொழிதல் | பழுதடைந்த கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து விட்டு, அவ்விடத்தில் கட்டிடத்துறை மூலம் இளநிலை பொறியாளர், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர், மன்ற உறுப்பினர் மற்றும் குடிநீர் வாரிய பொறியாளர் ஆகியோருக்கு அலுவலக கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | 6வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.227, நாள்:22.07.2008 |

எனவே, மேற்கண்ட கோட்ட அலுவலகத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.246/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.இ1/6070/2008**
**ஆணையாளர் அவர்களின் 06.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :411/2008 பொருள் எண்.5

**பொதுக் கழிப்பிடத்தை இடிக்க அனுமதி.**

வார்டு–105 மண்டலம்–7

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–7, பகுதி–20, வார்டு–105 சாமி தெருவில் யாரும் பயன்படுத்தாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் |
| கட்டிடம் கட்டடப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி, 1980 |
| பரப்பளவு | 1500 ச.அடி.(147,00 ச.மீ.) |
| தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.45041.10 |
| கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | யாரும் பயன்படுத்தாத நிலையில் உள்ளதால் |
| திட்டமுன் மொழிதல் | யாரும் பயன்படுத்தாத நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடத்தை இடித்துவிட்டு பல்நோக்கு அறை கட்டும் பணி. |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | 7வது வார்டு குழு தீர்மான எண்.1226 நாள்:18.07.2008 |

எனவே, மேற்கண்ட பொதுக்கழிப்பிடத்தை இடிக்கும் பணிக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

7.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 53/2008, நாள் 7.08.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.235/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.இ1/4086/2008**
**ஆணையர் அவர்களின் 12.06.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :412/2008 பொருள் எண்.6

**பழுதடைந்த சத்துணவு கூட கட்டிடம் இடிக்க அனுமதி.**

**வார்டு எண்.109 மண்டலம்–7**

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | மண்டலம்–7, பகுதி–21, வார்டு–109, சுதந்திரா நகரில் பழுதடைந்த நிலையில் உள்ள கல்நார் கூரையினாலான சத்துணவு கூட (மைய எண்.220) கட்டிடம். |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி (கட்டிடத்துறை) 1982. |
| கட்டிடத்தின் பரப்பளவு | 817 சதுர அடி (75.90 ச.மீ.) |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.17,383/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| திட்ட முன்மொழிவு | பழுதடைந்த நிலையில் உள்ள கல்நார் கூரையினாலான சத்துணவு கூட மைய எண்.220 கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டும் பணி. |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள். | 7வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.1031 நாள்:16.04.2008. |

எனவே , சுதந்திரா நகரில் பழுதடைந்த நிலையில் உள்ள கல்நார் கூரையினாலான சத்துணவு கூட (மைய எண்.220) கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

06.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.70/08 நாள்.06.8.08–ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.226/2008, நாள்: 18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.இ1/4088/2008**
**ஆணையர் அவர்களின் 13.06.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :413/2008 பொருள் எண்.7

**பழுதடைந்த சத்துணவு கூட கட்டிடத்தை இடிக்க அனுமதி.**

வார்டு எண்.112 மண்டலம்–7

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | மண்டலம்–7, பகுதி–21, வார்டு–112, அம்மையப்பன் சந்தில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த நிலையில் உள்ள (Asbestos) கல்நார் கூரையினாலான சத்துணவு கூட (மைய எண்.285) கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி (கட்டிடத்துறை) 1982. |
| கட்டிடத்தின் பரப்பளவு | 817 ச.அடி (75.90 ச.மீ.) |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.17,383/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| திட்ட முன்மொழிவு | பழுதடைந்த நிலையில் உள்ள (Asbestos) கல்நார் கூரையினாலான சத்துணவு கூட (மைய எண்.285) கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டும் பணி. |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள். | 7வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.1028 நாள்:16.04.2008. |

எனவே மேற்கண்ட சத்துணவுக் கூட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

06.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.69/08 நாள்.06.8.08–ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.225/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.இ1/4087/2008**
**ஆணையர் அவர்களின் 12.06.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :414/2008 பொருள் எண்.8

**பழுதடைந்த சத்துணவு கூட கட்டிடத்தை இடிக்க அனுமதி.**

| வார்டு எண்.112 | மண்டலம்–7 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | மண்டலம்–7, பகுதி–21, வார்டு–112, அம்மையப்பன் சந்தில் உள்ள சென்னை மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பழுதடைந்த நிலையில் உள்ள (Asbestos) கல்நார் கூரையினாலான சத்துணவு கூட (மைய எண்.286) கட்டிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி (கட்டிடத்துறை) 1982. |
| கட்டிடத்தின் பரப்பளவு | 655 ச.அடி (60.69 ச.மீ.) |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.13,936/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்கப்பட வேண்டியுள்ளது. |
| திட்ட முன்மொழிவு | பழுதடைந்த நிலையில் உள்ள (Asbestos) கல்நார் கூரையினாலான சத்துணவு கூட (மைய எண்.286) கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டும் பணி. |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள். | 7வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.1029 நாள்:16.04.2008. |

எனவே மேற்கண்ட சத்துணவுக் கூட கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

06.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.68/08 நாள்.06.8.08–ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.224/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.8.ந.க.எண்.அ1/3712/2008
ஆணையர் அவர்களின் 11.07.2008 நாளிட்ட குறிப்பு.

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :415/2008 பொருள் எண்.9

**பழைய பொதுக்கழிப்பிட கட்டிடங்கள் இடிக்க அனுமதி**

| வ. எண். | வார்டு எண்.123 | மண்டலம்–8 |
|---|---|---|
| 01 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | (1) 61வது தெரு, அசோக்நகர் நல்லான் குப்பம்<br>(2) காசிக்குளம் குடிசைப்பகுதி, மேற்கு கோடம்பாக்கம் சாலையில் உள்ள பழைய சேதமடைந்த பொதுக் கழிப்பிடங்கள் |
| 02 | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1990–1991 கட்டடத்துறை, |
| 03 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | (1) 61வது தெரு, அசோக்நகர் நல்லான் குப்பம் ரூ.76096.50.<br>(2) காசிக்குளம் குடிசைப்பகுதி, மேற்கு கோடம்பாக்கம் சாலை ரூ.69418.75. |
| 04 | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மேற்கண்ட இரண்டு கழிப்பிடங்களும் மிகவும் சேதமடைந்துள்ளது என்பதால் அவைகளை இடித்துவிட்டு புதிய பொதுக் கழிப்பிடங்கள் கட்ட ஏதுவாக இக்கழிப்பிடங்களை மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னர் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தாரரைக் கொண்டு இடிக்கப்படும். |
| 05 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | (1) 61வது தெரு, அசோக்நகர் நல்லான் குப்பம் 81.40 ச.மீ.(875.86 சதுர அடி)<br>(2) காசிக்குளம் குடிசைப்பகுதி, மேற்கு கோடம்பாக்கம் சாலை 34 ச.மீ.(365.84 சதுர அடி) |
| 06 | திட்ட முன்மொழிதல் | மீண்டும் அதே இடத்தில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டப்பட உள்ளது. |
| 07 | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள். | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.332, நாள்:05.06.2008. |

எனவே, மேற்கண்ட கட்டிடங்களை இடிப்பதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ 7.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு ( பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 45 /2008, நாள் 7.08.2008-ன்படி இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

“18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 227/2008, நாள்: 18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி4/ 2358/2008**
**ஆணையரின் 08–07–08 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :416/2008 பொருள் எண்.10

**சென்னை மாநகரில் சாலைகளில் கார்நிறுத்தம் தொகை புதிய தொழில்நுட்பம் மூலம் வசூலிக்க அனுமதி வேண்டுவது**

சென்னை மாநகரில் வியாபார முக்கியத்துவம் உள்ள சாலைகள், பிரதான கோயில்கள் உள்ள சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் அருகிலுள்ள சாலைகளில் போக்குவரத்து காவல்துறை அனுமதியுடன் கார் நிறுத்தங்கள் (Car parking) அமைத்து தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல கழகம் மூலம் (Tamil Nadu Exserviceman Welfare Corporation Limited) ,பொது மக்களிடம் வாடகை வசூல் செய்யப்பட்டு அவற்றில் 70 : 30 என்ற சதவீதத்தில் வருவாய் துறை வாயிலாக சென்னை மாநகராட்சிக்கு மேற்கண்ட கழகம் மூலம் தொகை செலுத்தப்படுகிறது.

தற்போது, பெங்களூரு மாநகரில் சில முக்கிய சாலைகளில் நவீன தொழில்நுட்பத்துடன் ஒரு தானியங்கி வசூல் பெட்டகம் அமைத்து அதன் மூலம் கார் நிறுத்த வாடகை வசூல் செய்யப்படுகிறது. இத்திட்டம் மாநகராட்சி தனியார் பங்களிப்புடன் சிறப்பான முறையில் செயல்படுகிறது.

இந்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கார் நிறுத்தம் திட்டம் சீரான ஒழுங்குமுறை கார் நிறுத்தம் ஏற்படுத்தவும், வாகனங்களின் போக்குவரத்தை சீரமைக்க உதவும்.

இத்திட்டம் மூலம் நிறுவும் கார் நிறுத்த வசூல் பெட்டகத்தினால் சாலையோர கட்டமைப்பு வசதி மேம்படுத்தவும், இத்திட்டம் மாநகராட்சி மற்றும் தனியார் பங்கேற்பின் மூலம் செயல்படுத்த இருப்பதால் சென்னை மாநகராட்சிக்கு செலவினம் ஏதும் இல்லாமல் இருப்பதுடன் மாநகராட்சிக்கு வருவாயும் கிடைக்கும் என கருதுவதாலும், சென்னை மாநகரிலும் பிரதான சாலைகளில் புதிய தொழிநுட்பத்துடன் கூடிய தானியங்கி வாகன நிறுத்த வசூல் பெட்டகம் மாநகராட்சி தனியார் பங்களிப்புடன் அமைக்க நிலைக்குழு (பணிகள்)–ன் சுற்றறிக்கை அனுமதியை எதிர் நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

‘‘25.07.2008 நடைப்பெற்ற நிலைக்குழு (வ.வி.(ம).நிதி) கூட்டத்தின் தீர்மான எண்:186, நாள்:25/07/2008–ன்படி நிலைக்குழு (பணிகள்) அனுமதிப் பெற்று மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்கின்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது‘‘

எனவே, மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.239/2008, நாள்:18.8.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.2.நக.எண்.இ2/2536/2007**
**ஆணையர் அவர்களின் 23.07.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :417/2008 பொருள் எண்:11

**திருவாளர். அனுராத் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களை ஒப்பந்த பெயர் பட்டியலிலிருந்து 5 ஆண்டுகளுக்கு விலக்கி வைக்க**

மண்டலம்–2, பகுதி–6, வார்டு–24ல் குமாரப்ப தெரு, மலையப்பன் தெரு மற்றும் முதல் நாராயணன் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் (RMC) சாலை அமைக்கும் பணிக்கான ஒப்பம் கோரப்பட்டு அந்த ஒப்பத்தின் மதிப்பு ரூ.5,61,992.76/– (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று இரண்டு மற்றும் எழுபத்து ஆறு பைசா மட்டும்)–க்கு 2006–2007ம் ஆண்டின் விலை விகிதிப்படி (+) 1.90 அதிக விழுக்காடு (அதிகம்) குறிப்பிட்ட திருவாளர் அனுராத் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தாருக்கு ஒப்பம் வழங்கப்பட்டது. ஒப்ப விதிகளின்படி 7 நாட்களுக்குள் உடன்படிக்கை செய்து கொள்ளும்படியும், பணியை துவங்கும்படியும் 22.06.2007 தேதியிட்ட இவ்வலுவலக கடிதத்தின் மூலம் பணி ஆணை வழங்கப்பட்டது.

ஆனால் ஒப்பந்ததாரர் பணியை தொடங்காமல் மெத்தனமாக இருந்ததால் உதவி செயற்பொறியாளர்/பகுதி–6 அவர்களின் 16.07.2007 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பணியை தொடங்கும்படி கூறப்பட்டது.

மேலும், மேற்குறிப்பிட்ட கடிதங்களுக்குப்பிறகும் ஒப்பந்ததாரர் திருவாளர்.அனுராத் கன்ஸ்ரக்ஷன் நிறுவனத்தார் பணியைத் தொடங்காமலும் ஆறு மாதகாலம் கழித்தும் பணியை துவங்காமல் இருந்ததாலும் திருவாளர். அனுராத் கன்ஸ்ரக்ஷன் நிறுவனத்தாரை ஒப்பந்ததாரர் பெயர் பட்டியலிலிருந்து 5 ஆண்டுகளுக்கு ஏன் விலக்கி வைக்க கூடாது என ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டது.

தனியர் சமர்பித்த 13.12.07 நாளிட்ட கடிதத்தில் மார்க்கெட் நிலவரப்படி கட்டிடப் பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக புதிய விகிதப்படி ஒப்பத் தொகையினை மாற்றிமைத்தபின் பணி வழங்கிட வேண்டியுள்ளார். இதனை ஒப்ப விதிகளின்படி ஏற்க இயலாது.

எனவே,

1) மேற்சொன்ன ஒப்ப பணியான சிமெண்ட் கான்கிரீட் சாலை பணியை துவங்காமலும் மற்றும் உடன்படிக்கையும் செய்யாததால் ஒப்பந்ததாரரை ஒப்பந்ததாரர் பெயர் பட்டியலிலிருந்து 5 ஆண்டுகளுக்கு விலக்கி வைக்கவும்,

2) ஒப்ப விதி 1–5–3 ன்படி முன் வைப்புத் தொகையினை பறிமுதல் செய்யவும்,

3) மேற்சொன்ன பணியை ரத்து செய்யவும், மேலும் 2008–2009ம் ஆண்டின் விலைவிகிதப்படி மறு மதிப்பீடு தயாரிக்கவும் அம்மதிப்பீட்டிற்கு மீண்டும் புதிய ஒப்பம் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"18.8.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.244, நாள்: 18.8.2008–ன்படி மேற்சொன்ன இனம் – 1ஐ தவிர்த்து, இனம்–2 மற்றும் 3–க்கு மட்டும் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.2
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பத.ந.க.எண்.டி8/554/2008.**
**ஆணையாளரின் 14.08.2008 நாளிட்ட குறிப்பு**

**27.08.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :418/2008 பொருள் எண்.12

**கீழ் தளம் (Basement) + ஸ்டில்ட் தளம் (Stilt) + இரண்டு தளம் கட்டிடங்களுக்கு – திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல்**

சென்னை மாநகராட்சியில் தற்பொழுது தரைதளம் மற்றும் முதல் தளம் கொண்ட நான்கு குடியிருப்பு பகுதிக்கு மிகாமல் உள்ள கட்டிடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி மண்டல செயற் பொறியாளர்களால் வழங்கப்படுகிறது.

மேலும் தற்பொழுது ஒரு கீழ் தளம் (Basement) + ஸ்டில்ட் தளம் (Stilt) + இரண்டு தளம் கட்டிடங்களுக்கு நான்கு குடியிருப்பு பகுதிக்கு மிகாமல் திட்ட அனுமதி சென்னை மாநகராட்சியில் வழங்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அதிகார பகிர்வு வழங்கியுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள ஒரு கீழ் தளம் (Basement) + ஸ்டில்ட் தளம் (Stilt) + இரண்டு தளம், நான்கு குடியிருப்பு பகுதிக்கு மிகாமல் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு அவை குடியிருப்பு பகுதி, கலப்பு குடியிருப்பு பகுதி, வர்த்தக பகுதிகளில் இருக்கும் பட்சத்தில் வளர்ச்சி கட்டுமான விதி 7(d) அல்லது வளர்ச்சிக்கட்டுமான விதி 19(b) & 17(a)ற்கு உட்பட்டு இருந்தால் திட்ட அனுமதி வழங்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், அவ்வாறு திட்ட அனுமதி வழங்கும்போது கீழ்தளம் (Basement) கட்டிடங்களுக்கு முறையான காற்றோட்ட வசதி (Ventilation) உள்ளவாறு கவனித்து அனுமதி வழங்க வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள கட்டிடங்கள் கீழ்கண்ட பகுதியில் வரும்பொழுது அவ்விண்ணப்பங்களை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் CRZ பகுதியில் இருந்தால்
விண்ணப்பங்கள் Aquifer Recharge பகுதியில் இருந்தால்
விண்ணப்பங்கள் Catchment பகுதியில் இருந்தால்
விண்ணப்பங்கள் கட்டப்படவுள்ள விமானதள எல்லையில் இருந்து 1.5 கி.மீ. தூரத்தில் இருந்தால்.
விண்ணப்பங்கள் கட்டப்படவுள்ள Metro Rail Corridor பகுதியில் இரு பக்கங்களிலும் 50 மீட்டருக்குள் இருந்தால்
விண்ணப்பங்கள் Main Transportation Corridor பகுதியில் சென்னை மாநகராட்சி பகுதிக்குட்பட்டு இருந்தால்.
விண்ணப்பங்கள் அரசு நில ஆர்ஜித பகுதியில் இருந்தால்,

எனவே, இப்பொருள் நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "இப்பொருளில் கூறப்பட்டிருக்கும் திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி 10 மண்டல செயற் பொறியாளர்களுக்கு பதிலாக நகரமைப்பு பொறியாளர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற திருத்தத்துடன் 18.08.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.8/2008, நாள்.18.08.2008ன்படி, நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது"

> "குறிப்பில் கூறப்பட்டிருப்பது போல் செயற் பொறியாளர்களுக்கு திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி வழங்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்